செய்தி வெளியீடு எண்: 765 நாள்:20.12.2011

# செய்தி வெளியீடு

## எம்ஜிஆர். அரசு திரைப்படக்கல்லூரியில் பயிலும் மாணவ / மாணவிகளிடம் மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்கள் குறைகள் கேட்டார்.

எம்ஜிஆர் அரசு திரைப்படக்கல்லூரியில் பயிலும் மாணவ / மாணவிகளிடம் மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்கள் குறைகள் கேட்டார்.

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் இன்று (20.12.2011) எம் ஜி ஆர். அரசு திரைப்படக்கல்லூரிக்கு சென்றார்.

அங்கு பயிலும் மாணவர்களுக்கு செய்யப்பட்டுள்ள வசதிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் தங்கும் வசதி, குடிதண்ணீர் வசதி, மின்விளக்கு வசதி, கழிவறை வசதி, குளியலறை வசதி, போன்ற பல்வேறு வசதிகள் குறித்து ஆய்வு செய்தார். பின்னர் அமைச்சர் அவர்கள் அங்கு பயிலும் மாணவ மாணவியர்களை சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்தார். மாணவர்களுக்கு பாடம் நடத்தும் ஆசிரியர்களிடம், மாணவர்களின் கல்வித்திறன் குறித்து ஆய்வு நடத்தினார்.

மேலும், அங்கு அமைந்துள்ள நூலகத்தினை பார்வையிட்டு, நூலகத்தினை மாணவர்கள் சீரிய முறையில் பயன்படுத்தும் விதமாக ஒரு நூலகரை உடனடியாக நியமிக்கவும், மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக உயரிய தொழில் நுட்பம் வாய்ந்த கருவிகளை வெளியில் இருந்து கொண்டு வந்து பயன்படுத்தவும், மாணவர்கள் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீரை முழுமையாக பயன்படுத்திட உரிய நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிட்டார்.

எம்ஜிஆர் அரசு திரைப்படக்கல்லூரி வளாகத்தை தொடர்ந்து சுத்தமாக பராமரிக்கவும் , இங்கு அமைந்துள்ள படப்பிடிப்பு பகுதிகளை சீரமைக்கவும் உரிய நடவடிக்கை எடுக்க பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இக்கல்லூரியில் கல்வி பயின்று முடித்து வெளியில் வரும்போது, மாணவர்கள் திரைப்படத்துறையில் பணியாற்றும் விதமாக தமிழகத்தில் உள்ள திரைப்பட தொழில் நுட்ப சங்கங்களில் உறுப்பினராக கட்டணமின்றி சேர்த்துக் கொள்ள வேண்டும் என கல்லூரி மாணவர்கள் அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்தனர். இக்கோரிக்கை குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

ஆய்வின் போது, செய்தி மக்கள் தொடர்புத்துறையின் இயக்குநர் முனைவர் பொ. சங்கர், இணை இயக்குநர் (நிர்வாகம்) திரு தங்க புகழேந்தி, எம்.ஜி.ஆர் அரசு திரைப்படக்கல்லூரியின் முதல்வர் (பொறுப்பு) திரு ஸ்ரீதரன், பிரிவுத்தலைவர்கள், தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் தலைமை தயாரிப்பாளர் (பொறுப்பு) திரு ஜீ. மோகன், எம்.ஜி.ஆர் அரசு திரைப்படக்கல்லூரியின் மாணவ பேரவைத்தலைவர் திரு இன்னாசி பாண்டி , பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் (பராமரிப்பு) திரு கே ஏ இராஜசேகரன், பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் (மின்சாரம்) திரு திருமால் மற்றும் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.